ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

தமிழ் மொழிபெயர்ப்பு

எனது இலக்கம் : PS/PCA/11/PMT/5 - ii
2023 ஒக்டோபர் 13 ஆம் திகதி

சுற்றறிக்கை இல. : PS/PCA/Circular/2/2023

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
இராஜாங்க அமைச்சுக்களின் விடயங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்களுக்கும்

**வரவு செலவு மீதான விவாதம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் – 2024**

பாராளுமன்ற அலுவல்கள் செயற்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்ட நேரஅட்டவணைக்கமைவாக 2023 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கௌரவ சனாதிபதியவர்களால் நிதி அமைச்சர் என்ற வகையில் வரவுசெலவுத்திட்ட உரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வரவுசெலவுத்திட்ட இரண்டாம் முறை வாசிப்பு மீதான விவாதம் 2023 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. வரவுசெலவுத்திட்ட இரண்டாம் முறை வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 2023 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வரவுசெலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் வரவுசெலவுத்திட்ட மூன்றாம் முறை வாசிப்பு மீதான வாக்கெடுப்பு. 2023 டிசம்பர் மாதம் பி.ப.5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வரவுசெலவுத்திட்ட விவாதம் தொடர்பான நிகழ்ச்சிநிரலின் பிரதியொன்று தங்களின் தகவலுக்காக இத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

02. இக்கால எல்லைக்குள் கௌரவ அமைச்சர்கள் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களை திட்டமிடக்கூடாதென்பதுடன் விசேட சந்தர்ப்பங்களின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மூலம் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் தூதரகங்களூடாக ஏற்புடைய பிரதிநிதித்துவத்தை வழங்க முடியுமென்பதனை மேலும் குறிப்பிடுகின்றேன்..

03. ஆகவே, அத்தியாவசிய பணிகள் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டுப் பயணங்களில் இக்கால எல்லைக்குள் கலந்து கொள்வதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கௌரவ அமைச்சர்கள், அமைச்சுக்களின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் திணைக்களப் பிரதானிகள், தலைவர்கள் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

04. மேலும், அமைச்சுக்கள் மீதான குழுநிலை சந்தர்ப்பத்தின் போதான விவாதம் நடைபெறும் தினங்களில் ஏற்புடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் பங்கேற்பு அத்தியாவசியம் என்பதுடன். ஏனைய நிறைவேற்று / பதவிநிலை உத்தியோகத்தர்கள் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனங்களில் தங்கியிருக்க வேண்டுமென மேலும் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்/ ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க
சனாதிபதியின் செயலாளர்

தொலைபேசி : +94 11 2354420 தொலைநகல் : +94 11 2446657
மின்னஞ்சல் : prsec@presidentsoffice.lk

பிரதிகள் -
1. பிரதம அமைச்சரின் செயலாளர்
2. அமைச்சரவையின் செயலாளர்
3. பாராளுமன்ற சபை முதல்வரின் செயலாளர்
4. பாராளுமன்றத்தின் அரசாங்க முதற்கோலாசானின் செயலாளர்

} தகவலுக்காக

ගාලු මුවදොර, කොළඹ 01.
காலி முகத்திடல், கொழும்பு 01.
Galle Face, Colombo 01.

දුරකථන / தொலைபேசி / Telephones: ++94 (0) 11 2354418, ++94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++94 (0) 11 2446657
ඉ - තැපැල / மின்னஞ்சல் / E-mail: prsec@presidentsoffice